# க.பொ.த (சா.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2016

**வரலாறு I** | **ஒரு மணித்தியாலம்**

**கவனிக்குக :**

* **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.** இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்
* **1** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்ற விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவு செய்க.

---

**01.** பின்வருவனவற்றுள் மகாவம்சத்திற்கு எழுதப்பட்ட “டீகாவ” எனும் உரைநூல் எனக் கருதப்படுவது எது?

(1) வினய அட்டகதா (2) வம்சத்தப்பகாசினி
(3) ஜாதகட்ட கதா (4) உத்தர விகார அட்டகதா

**02.** சீகிரிய பொத்தான எந்த வரலாற்றுக்கு முற்பட்ட கால இருப்பிடத்தைச் சேர்ந்தது?

(1) தாழ்நில உலர்வலயக் குகைகள் (2) மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலம்
(3) தாழ்நில ஈரவலயக் குகைகள் (4) கரையோர வெட்ட வெளிப் பாசறைகள்

**03.** பின்வரும் சோடிப் பதங்களில் ஒன்றுடன் ஒன்று **பொருந்தாத** சோடி

(1) தன்னை நரேஸ்வர (நரஇசேர) என அறிமுகம் செய்துகொண்டவன். - குட்டகண்ண அபய மன்னன்
(2) மின்னேரித் தெய்வம் என வழிபடப்பட்டவன் - மகாசேன மன்னன்
(3) “ஆலகபயமகாராஜா” எனும் பட்டத்தைப் பயன்படுத்தல் - முதலாம் முகலன் மன்னன்
(4) “சக்கரவர்த்தி” எனும் எண்ணக்கருவைப் பயன்படுத்தல் - நிஸ்ஸங்கமல்ல மன்னன்

**04.** முதலாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த மிக முக்கியமான நிகழ்வு

(1) அரசியல் பாதுகாப்புக் கருதி அயல் நாடுகளுடன் விவாக உறவை ஏற்படுத்தியமை.
(2) சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்து இலங்கையை ஒன்றிணைத்தமை.
(3) நாட்டின் பொருளாதார முன்னேற்றங் கருதி முக்கிய பணியாற்றியமை.
(4) பல விகாரைகளைப் புனருத்தாரணம் செய்தமை.

**05.** “விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்” எனக் கூறிய மன்னன் யார்?

(1) வசப மன்னன் (2) மகாசேன மன்னன்
(3) தாதுசேன மன்னன் (4) மகா பராக்கிரமபாகு மன்னன்

**06.** சமயம், மொழி ரீதியில் வேறுபட்டிருந்தாலும், தமது அண்டை நாட்டுப் பிரஜைகளுடன் நம்பிக்கையுடன் செயற்படுவது எமது புராதன ஆட்சியாளர்களின் வெளிநாட்டுக் கொள்கையில் தெளிவாகத் தெரியும் இயல்பாகும். இக்கூற்றை நிரூபிக்கும் உதாரணமாக அமைவது,

(1) முதலாம் கஜபாகு மன்னன் பத்தினித் தெய்வ கோயில் ஒன்றின் திறப்புவிழா வைபவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டுத் தென் இந்தியாவிலுள்ள சேர இராச்சியத்தைச் சென்றடைதல்.
(2) ஆறாம் அக்போ மன்னனால் சீனாவுடன் இராஜதந்திரிகள் தூதுப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டமை.
(3) முதலாம் விஜயபாகு மன்னன் தலதா மாளிகையின் பாதுகாப்பினை வேலைக்காரப் படையினருக்கு அளித்தமை.
(4) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பாண்டியருக்குப் படை உதவி அளித்தமை.

**07.** தென்னிந்திய கூலிப் படையினரின் உதவியை நாடிய முதலாவது உள்நாட்டு ஆட்சியாளர்களாகக் கருதப்படுபவர்கள்.

(1) குட்டகண்ண தீசன், வொகாரிக தீசன்
(2) முதலாம் சிறிநாகன், இளய நாகன்
(3) வொகாரிக தீசன், அபயநாகன்
(4) இளநாகன், அபயநாகன்

[பக். 2 ஐப் பார்க்க

**08.** பண்டைக் காலத்தில் இலங்கையில் பல்வேறு கைத்தொழில்களில் ஈடுபட்ட கலைஞர் பெயர்கள் A பகுதியிலும் B பகுதியில் அவர்கள் மேற்கொண்ட கைத்தொழில்களும் காணப்படுகிறன. A உடன் B இனை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| **"A"** | | **"B"** | |
|---|---|---|---|
| (i) | கபர | A | நூல் நூற்றல் |
| (ii) | தடிக | B | சித்திரம் வரைதல் |
| (iii) | ததவய | C | இரும்புத் தொழில் |
| (iv) | சித்தகர | D | தந்தச் செதுக்கல் |

(1) A D C B (3) B C A D (4) C A D B (2) C, D, A, B

**09.** வனைதற் சில்லு எனும் இயந்திரம் எப்பொருளைச் செய்யும் பொருட்டுப் பயன்படுத்தினர்?
(1) இரும்புப் பொருட்கள் (2) மட்பாண்டம்
(3) மர உற்பத்திப் பொருட்கள் (4) யானைத் தந்தத்தாலான பொருட்கள்

**10.** காற்றினால் ஏற்படும் நீர் அலைகளின் அழுத்தம் காரணமாக அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள குளத்தின் பகுதிகள் யாது?
(1) மடைக்கதவு (2) குளக்கட்டு
(3) அலைதாங்கி (4) கலிங்கல் தொட்டி

**11.** பண்டைய கட்டிடப் பொறியியலாளர்கள் உயரமான கட்டிடங்களை இடி மின்னலிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பொருத்திய உபகரணம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
(1) மொஹல
(2) தியகெட்ட பஹன
(3) வஜ்ரசும்பட்ட
(4) எல்லங்காவ

The National e-learning Portal for The General Education

**12.** பண்டைய வைத்திய முறையின் சிறப்பினைக் காட்டும் சிறந்த எடுத்துக்காட்டு பெறப்பட்டது,
(1) அநுராதபுர அபயகிரி அகழ்வுகளில்
(2) பொலன்னறுவை ஆலாஹன பிரிவேனாவின் அகழ்வுகளில்
(3) அநுராதபுர உள்நகர் அகழ்வுகளில்
(4) சீகிரியா அலகொல வெவ தெஹிகஹ அலகந்த அகழ்வுகளில்

**13.** மிருகக் கொலையைத் தடைசெய்யும் சட்டம் எந்த மன்னனால் அமுல் செய்யப்பட்டது?
(1) ஆமண்ட காமினி அபயன் (2) நான்காம் மகிந்தன்
(3) மூன்றாம் உதயன் (4) முதலாம் கஜபாகு

**14.** பின்வரும் சட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான மிக முக்கிய சட்டமாக விளங்குவது,
(1) குளங்களிலிருந்து நீரைப் பெறும் வயல்களில் நெல் தவிர பயறு பயிரிடக் கூடாது.
(2) நீர் நிலைகளில் வாழும் பறவைகளைக் கொல்லக் கூடாது.
(3) எருமை, பசுக்கள், ஆடுகள் என்பவற்றைக் கொலை செய்வோருக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.
(4) உயர் நிலங்களில் உள்ள காடுகளை அழித்தல் ஆகாது.

**15.**
- கோட்டையில் காவல் அரண் அமைத்தல்.
- ஆரிய சக்கரவர்த்தியின் வரி அறவிடுவோரைத் தண்டித்தல்.
- மன்னனின் பிரதான அமைச்சனாக செயற்படுதல்.

மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்.
(1) சேனாதிலங்கார செனவிரத் (2) நிஸ்ஸங்க அழகேஸ்வர
(3) வீர அழகேஸ்வர (4) அம்புலுகல இளவரசன்

**16.** “அ” பிரிவில் இலக்கிய நூல்களும் “ஆ” பிரிவில் அதனுடன் தொடர்புடைய இராசதானிக் காலமும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சரியான முறையில் இணைக்கும்போது பெறப்படும் விடை.

| “அ” | | “ஆ” | |
|---|---|---|---|
| (i) | தலதா சிரித்த | A | பொலன்னறுவை |
| (ii) | குத்தில காவியம் | B | தம்பதெனிய |
| (iii) | கவு சிலுமின | C | குருணாகல் |
| (iv) | சத்தர்மலங்கார | D | கம்பளை |
| | | E | கோட்டை |

(1) A B D E (2) B E C D (3) C B D E (4) C E B D

**17.** பின்வரும் தகவல்களில் முதலாம் விமலதர்மசூரிய மன்னனுக்கு மாத்திரம் பொருத்தமாக அமைவது,

A - குசுமாசனதேவியை மணஞ் செய்தல்.

B - தந்துரே போரில் போர்த்துக்கேயரைப் படுதோல்வி அடையச் செய்தல்.

C - ரந்தெனிவலப் போரில் தலைமை வகித்தல்.

D - போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றல்.

(1) A யும் B யும் (2) A யும் D யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

**18.** போர்த்துக்கேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்றும் பொருட்டு மேற்கொண்ட போர்களில் தொன் ஜெரனிமோ த அசுவேது நடாத்திய போர்.

(1) தந்துரேப் போர். (2) பலனப் போர்
(3) ரந்தெனிவலப் போர் (4) கன்னொறுவாப் போர்

**19.** போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராசதானிக்குமிடையே மோதல்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணம்

(1) சங்கிலி மன்னனின் ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேய வர்த்தகக் கப்பல்களுக்குத் தடை ஏற்பட்டமை.
(2) மன்னாரைச் சூழவுள்ள பிரதேசங்களில் முத்துக் குளித்தலில் போர்த்துக்கேயர் பெற்ற இலாபம் இல்லாமல் போனமை.
(3) கறுவா, மிளகு போன்ற வர்த்தகப் பொருட்களை யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து பெற்றுக்கொள்வதில் தடை ஏற்பட்டமை.
(4) விதிய பண்டாரன் யாழ்ப்பாணத்திற்குத் தப்பிச் சென்றபோது சங்கிலி மன்னன் அவனை ஏற்றுக் கொண்டமை.

**20.** கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வமான உரிமையை ஆங்கிலேயர் உறுதிப்படுத்திக் கொண்டது,

(1) ரொபட் பிரௌன்றிக் ஆளுநரின் ஆக்கிரமிப்பின் மூலம்
(2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை சிறைப்பிடித்ததன் மூலம்
(3) 1815 ஆம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின் மூலம்
(4) 1818 ஆம் ஆண்டு பிரகடனத்தை வெளியிட்டதன் மூலம்

**21.** கோல்புறூக் குழுவினால் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்கும் பொருட்டு முன் வைக்கப்பட்ட ஆலோசனை

(1) நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்.
(2) சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பவற்றை ஏற்படுத்தல்.
(3) கண்டியையும் தாழ்நிலப் பிரதேசங்களையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்.
(4) அரசின் வர்த்தக ஏகபோக முறை அகற்றப்பட்டமை.

**22.** மனிங் அரசியல் சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் அடங்கிய விடை

A - சட்டவாக்கக் கழகத்தில் முதன்முதலாக உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகமாகக் காணப்படல்.

B - படித்த இலங்கையர்கள் சார்பாக பிரதிநிதியொருவரை சட்டவாக்கக் கழகத்திற்கு நியமித்தல்.

C - பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகஞ் செய்தல்.

D - நிருவாகக்குழு முறை அறிமுகஞ் செய்யப்படல்.

(1) A யும் B யும் (3) A யும் C யும் (4) B யும் C யும் (2) B யும் D யும்

- பின்வரும் அட்டவணையிலுள்ள A - J வரையிலான தகவல்களின் அடிப்படையில் 23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| வருடம் | பிரித்தானிய ஆளுநர் | சுதேசத் தலைவர்கள் |
|---|---|---|
| A 1803 | D டொரிங்டன் பிரபு | G கொங்காலேகொட பண்டா |
| B 1818 | E பிரடரிக் நோர்த் | H கெப்பட்டிப்பொல |
| C 1848 | F ரொபட் பிரௌன்றிக் | J ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் |

**23.** மெக்டோவலின் கீழ் கண்டி இராசதானியின் ஆக்கிரமிப்பு தொடர்பான தகவல் அடங்கிய விடை,
(1) A E J (2) A F G (3) B F H (4) C D J

**24.** பிரித்தானியரது ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது விடுதலைப் போராட்டம் தொடர்பான தகவல்கள் அடங்கிய விடை
(1) A D G (2) B E J (3) B F H (4) C F J

**25.** 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கான அண்மைக் காரணம்
(1) 1840 ஆம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட தரிசு நிலச் சட்டம்
(2) அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பில் விரிசல் ஏற்படல்.
(3) அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கை
(4) புதிய நீதிமன்ற முறை அறிமுகஞ் செய்யப்பட்டமை.

- கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள சோடிப்பதங்களின் அடிப்படையில் 26 - 28 வரையிலான வினாக்களுக்கு விடை எழுதுக.

A - 1. உப்பு, கறுவா ஆகியவற்றின் ஏகபோக உரிமையை நீக்குதல்.
2. தனியார் நிறுவனங்கள் வர்த்தகத்தில் ஈடுபடல்.

B`- 1. கோப்பிப் பயிர்ச் செய்கை
2. ஹமிலியா வெஸ்டர்டிரிக்ஸ்

C`- 1. தேயிலைப் பயிச்செய்கை
2. லுல்கந்துர பெருந்தோட்டம்

D`- 1. தென்னைப் பயிர்ச் செய்கை
2. ஜேம்ஸ் டேலர்

The National e-learning Portal for The General Education

**26.** முதலாவது விடயத்தால் இரண்டாவது வளர்ச்சியைக் காட்டும் சோடிப் பதம் எது?
(1) A (2) B (3) C (4) D

**27.** முதலாவதற்கும் இரண்டாவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லாத சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**28.** இரண்டாவது முதலாவதன் அழிவிற்குக் காரணமாகியதை வெளிப்படுத்தும் சோடி எது?
(1) A (2) B (3) C (4) D

**29.** பின்வரும் நிகழ்வுகளைக் காலவரன் முறைப்படி அட்டவணைப்படுத்தினால் பெறப்படும் சரியான விடை
A - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியுடன் அரசியல் யாப்பினை வகுத்தல்.
B - சிங்கள மொழியை அரசகரும மொழி ஆக்கியமை
C - எஸ்.டப்ளியு.ஆர்.டீ. பண்டாரநாயக்கா ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து விலகியமை.
D - எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியை நிறுவுதல்.
(4) A D C B (3) C B D A (2) D B A C (1) D C B A

[பக். 5 ஐப் பார்க்க

**30.** பின்வருவனவற்றில் 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் 18 ஆவது உறுப்புரிமையில் எது தொடர்பாகக் குறிப்பிடப்படுகிறது?

(1) பிரதம மந்திரியும் அமைச்சரவையும்
(2) நீதிமன்றத் தொகுதியும் நீதி வழங்கலும்
(3) தேசிய அரசப் பேரவையும் சட்டமியற்றலும்
(4) அடிப்படை உரிமையும் பல்வேறு சுதந்திரமும்

**31.** 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய சங்கத்தை உருவாக்க சிங்களத் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்ட மக்கள் தலைவர்

(1) சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்
(2) ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள்
(3) அறிஞர் எம்.சி. சித்தி லெப்பை அவர்கள்
(4) சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்

**32.** மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் பொல்கொல்லையில் நதியை திசைதிருப்பி சுதுகங்கையில் சேரும் நீர் எந்த நீர்த் தேக்கத்தின் ஊடாக உலர் வலயத்திற்கு வழங்கப்படுகிறது?

(1) விக்டோரியா
(2) கொத்மலை
(3) போவதென்ன
(4) ரன்டெம்பே

**33.** மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியலில் ஏற்பட்ட **மிக முக்கிய** மாற்றமாக விளங்குவது

(1) மன்னர்கள் நிர்வாகத்தில் மத்திய வகுப்பினரின் உதவியைப் பெற்றுக் கொண்டமை
(2) தேசிய வாதம் வளர்ச்சியுற்றமை
(3) அனைத்து அதிகாரங்களும் அரசனைச் சார்ந்திருந்தமை
(4) பிரதேச அரசுகள் ஒன்றிணைந்தமை.

- கொடுக்கப்பட்டிருக்கும் படத்தினை அடிப்படையாகக் கொண்டு 34ஆம் 35ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.

**34.** இந்தப் படத்தில் காட்டப்படும் செயல் கைத்தொழில் புரட்சியுடன் தொடர்புடைய எக்கைத்தொழிலுடன் தொடர்புடையது?



(1) சுரங்கம்
(2) விவசாயம்
(3) நெசவு
(4) போக்குவரத்து

**35.** உருவில் காணப்படும் செயலை மேலும் இலகுவாக்கிக் கொள்ளும் பொருட்டு உருவாக்கப்பட்ட புதிய உற்பத்தி யாது?

(1) நீராவி இயந்திரம்
(2) பாதுகாப்பு விளக்கு
(3) இரும்புக் கேபிள் கம்பி
(4) ரோலர் இயந்திரம்

**36.** "அ" பகுதியிலுள்ள கூற்றுக்களை "ஆ" பகுதியிலுள்ள வரலாற்று நிகழ்வுடன் ஒப்பிடும்போது பெறப்படும் சரியான விடை

| "அ" | "ஆ" |
|---|---|
| (i) பொஸ்டன் தேநீர் விருந்து | A முதலாம் உலக மகாயுத்தம் |
| (ii) சமவுடைமைக் கருத்தைக் கொண்ட நாடு உருவாகுதல். | B அமெரிக்கப் புரட்சி |
| (iii) பிரான்ஸ் பேர்டினன்ட்டும் அவனது மனைவியும் கொலை செய்யப்படல் | C ரஷ்யப் புரட்சி |
| (iv) பேர்ள் துறைமுகம் தாக்கப்படல் | D இரண்டாம் உலக மகாயுத்தம் |
| | E பிரான்சியப் புரட்சி |

(1) B C A D (2) B E A D (4) D C A E (3) D E C B

**37.** ரஷ்யப் புரட்சி வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணம்

(1) நாடு முழுவதும் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டமையும் பாணின் விலை அதிகரித்தமையும்
(2) விவசாயத்தை விடத் தொழிற்சாலைகளில் ஆயுதங்களின் உற்பத்தி அதிகரித்தமை
(3) தொழிலாளர் விவசாயிகளுடன் படை வீரர்களும் புரட்சியில் இணைந்து கொண்டமை.
(4) ஆயுதந் தரித்த குழுவினர் அரசாங்கத்தின் முக்கிய மத்திய நிலையங்களைக் கைப்பற்றல்.

[பக். 6 ஐப் பார்க்க

**38.** A - ஆஸ்திரிய முடிக்குரிய இளவரசன் கொலை செய்யப்படல்.

B - பிஸ்மார்க்கின் வெளிநாட்டுக் கொள்கை

C - ஹிட்லரின் செயற்பாடு

D - ஜப்பானின் செயற்பாடு

இவற்றுள் முதலாம் உலக யுத்தம் தொடர்பாக

(1) A யும் B யும் சரியானவை, C யும் D யும் பிழையானவை.
(2) A யும் C யும் சரியானவை, B யும் C யும் பிழையானவை
(3) B யும் C யும் சரியானவை, A யும் C யும் பிழையானவை.
(4) C யும் D யும் சரியானவை, A யும் B யும் பிழையானவை.

**39.** ஐக்கிய அமெரிக்க அரசுகள் இரண்டாம் உலக யுத்தத்தில் பங்கு பற்றுவதற்கான அண்மித்த காரணம்

(1) ஜேர்மனிக்கு எதிராக பிரான்ஸ் யுத்தப் பிரகடனம் செய்தமை.
(2) ஹிட்லர் போலாந்தை ஆக்கிரமித்தமை
(3) யப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியமை
(4) ஜேர்மனி ரஷ்யாவை ஆக்கிரமித்தமை.

**40.** தற்காலத்திலும் பாதகமான விளைவுகளை அனுபவிக்கும் இரண்டாம் உலக யுத்தத்தின் செயற்பாடாக விளங்குவது

(1) ஜேர்மனி, யப்பான் உட்பட அச்சு நாடுகள் தோல்வியுற்றமை
(2) ஐம்பது மில்லியனுக்கும் அதிகமான உயிர் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டமை.
(3) ஜேர்மனியின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் பல மில்லியன் யூதர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டு கொல்லப்பட்டமை.
(4) யப்பானுக்கு எதிராக அணுகுண்டைப் பயன்படுத்தியமை.

The National e-learning Portal for The General Education

***

## க.பொ.த. (சா.தர) உதவிக் கருத்தரங்கு - 2016

**வரலாறு II** | மூன்று மணித்தியாலங்கள்

கவனிக்குக :

* பகுதி I இன் **முதலாம்** வினா கட்டாயமனது.
* பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும், பகுதி III இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**1.** **(அ)** பின்வரும் **(i)** இலுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும், வழங்கப்பட்டுள்ள **இலங்கைப்** படத்திலும் **உலகப்** படத்தில் **(ii)** இல் தரப்பட்டுள்ள **எல்லா** வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

**(i)** மல்வத்து ஓயா, கண்டி, சூகரதித்த, பூந்தல, நாச்சதுவ வாவி, நீர்கொழும்பு, மட்டக்களப்பு நகர், யாப்பகுவ காலி, சேனாநாயக்க சமுத்திரம், திருகோணமலை, மினிப்பே அணை.

(12 புள்ளிகள்)

**(ii)** பொஸ்டன் துறைமுகம், போர்த்துக்கல், நன்னம்பிக்கைமுனை, யாவாத்தீவு, பாரசீக வளைகுடா, ஹிரோஷிமா

(06 புள்ளிகள்)

**(ஆ)** **(i)** *A, B, C, D* எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்கள் / இடங்கள் என்பவற்றை ஒழுங்கு முறையில் உமது விடைத்தாளில் எழுதுக.

*A* - கி.பி. 1344 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வந்து, ஆரியச் சக்கரவர்த்திகளின் உதவி பெற்று, சிவனொளிபாத மலையைத் தரிசித்த அராபிய இனத்தைச் சேர்ந்த தேசசஞ்சாரி

*B* - உலகம் கோள வடிவமானதெனவும், ஏனைய கோள்கள் சூரியனைச் சுற்றிவருகிறதெனவும் கண்டறிந்த விஞ்ஞானி

*C* - முஸ்லிம் பிள்ளைகளுக்கென கொழும்பில் சஹிராக் கல்லூரியை நிறுவுவதில் முன்னோடியாக விளங்கியவர்.

*D* - மகாவலி கங்கையின் கிளை நதி ஒன்றினை கடதொர எனுமிடத்தில் மறித்து நிறுவப்பட்ட நீர்த்தேக்கம்

(04 புள்ளிகள்)

The National e-learning Portal for the General Education

- A, B ஆகிய உருக்களை அவதானித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை இலக்க ஒழுங்குமுறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

**(ii)** 1. உரு A இல் காணப்படும் கட்டிடத்தின் பெயர் யாது?
2. இந்தக் கட்டிடம் எந்த இராசதானிக் காலத்தைச் சேர்ந்தது?
3. இது எந்தக் கலைமரபினைச் சார்ந்தது?
4. எப்பொருளினால் இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது?



**உரு A**

(04 புள்ளிகள்)

**(iii)** 1. உரு B இல் காணப்படும் உருவின் பெயரைக் குறிப்பிடுக.
2. இது எந்த நாட்டில் அமைந்துள்ளது?
3. இந்தக் கட்டிடத்தை நிர்மாணித்த அரச வம்சத்தைக் குறிப்பிடுக.
4. இதில் அலங்காரத்திற்கென அமைக்கப்பட்டுள்ள நிர்மாணம் ஒன்றின் பெயரை எழுதுக.



**உரு B**

(04 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க.

# பகுதி II

**02.** **(i)** இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தகவல்கள் கிடைத்துள்ள குகைகள் **மூன்றினைப்** பெயரிடுக. (03 புள்ளிகள்)

**(ii)** முன் வரலாற்றுக் கால யுகத்தை, வரலாற்றுக்கு முற்பட்ட யுகத்தில் இருந்து வேறுபடுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** முன் வரலாற்றுக் காலத்தில் சிறந்த தொழினுட்பம் நிலவியமையை **இரண்டு** விடயங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** ஆரம்ப வரலாற்றுக் குடியிருப்புக்களின் தன்மையை **இரண்டு** விடயங்களை முன்வைத்து உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**03.** **(i)** பண்டைய சமுதாயத்தின் சுகாதாரத் தேவையை மேம்படுத்தும் பொருட்டு நடவடிக்கை எடுத்த ஆட்சியாளர்கள் **மூவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**(ii)** வரலாற்று மூலாதாரங்களுக்கு அமைய இலங்கையின் பண்டைய சமுதாயத்தில் காணப்பட்ட **நான்கு** கைத்தொழில்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** பண்டைய இலங்கைச் சமுதாயத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமையை **இரண்டு** விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** அந்நிய பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் பிரிவினருடன் நட்புறவுடன் வாழுதல் இந்நாட்டு வரலாற்றில் துல்லியமாகத் தெரியும் இயல்பு என்பதை உதாரணங்கள் **இரண்டின்** மூலம் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**04.** **(i)** இலங்கையில் சுற்றாடலைப் பாதுகாக்கும் பொருட்டு சட்டமியற்றிய மன்னர்கள் **மூவரின்** பெயரை எழுதுக. (03 புள்ளிகள்)

**(ii)** பின்வருவன தொடர்பாக அறவிடப்பட்ட வரிகளை ஒழுங்குமுறையில் எழுதுக.

*A* - குளத்து நீரைப் பயன்படுத்துதல்

*B* - சேனைப் பயிர்ச் செய்கை

*C* - அரசனுக்கு உரித்தான இடத்தில் பயிர் செய்தல்

*D* - கால்வாய்களில் மீன் பிடித்தல் (04 புள்ளிகள்)

**(iii)** முற்காலத்தில் இலங்கையில் பெண்களுக்குக் கௌரவமான இடம் வழங்கப்பட்டிருந்தமை பற்றி உதாரணங்கள் **இரண்டின்** மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** சுகதேகியாக வாழும் பொருட்டு பண்டைய சுதேச உணவு முறையின் மூலம் பெறத்தக்க முன்மாதிரிகை பற்றி **இரண்டு** உதாரணங்கள் தந்து தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**5.** **(i)** விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராசதானி மூன்றாகப் பிரிக்கப்பட்டது. அந்த **மூன்று** பிரிவுகளினதும் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

**(ii)** தர்மபால மன்னனுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமைக்கான காரணங்கள் **இரண்டு** தருக. (04 புள்ளிகள்)

**(iii)** முதலாம் விமலதர்மசூரிய மன்னன் எதிர்நோக்கிய **இரண்டு** சவால்களை விபரிக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** கண்டி இராசதானிக் காலத்தில் நிலவிய பொருளாதார, சமூக இயல்புகள் **மூன்றினைத்** தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**06.** **(i)** பின்வரும் பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களை முறையே எழுதுக.

*A* - தேயிலை *B* - தென்னை *C* - இறப்பர் (03 புள்ளிகள்)

**(ii)** கோல்புறூக் சீர்திருத்தத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார ஆலோசனைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** கோப்பிப் பயிர்ச்செய்கையின் விருத்தியில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் **இரண்டினை** விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** பிரித்தானிய ஆட்சியால் ஏற்பட்ட அனுகூலம் **ஒன்றினையும்**, பிரதிகூலம் **ஒன்றினையும்** விபரிக்குக. (06 புள்ளிகள்)

**07.** **(i)** 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட நீதிமன்றங்கள் **மூன்றினை** எழுதுக. (03 புள்ளிகள்)

**(ii)** 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் சமூக முன்னேற்றத்தின் பொருட்டுக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனை **இரண்டு** விடயங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** சுதந்திரத்தின் பின்னர் விவசாய அபிவிருத்தியின் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் **மூன்றினைத்** தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

## பகுதி III

**08.** 17 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பமாகிப் பரவியது.

**(i)** பிரித்தானியா தவிர்ந்த கைத்தொழில் புரட்சி பரவிய ஐரோப்பிய நாடுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

**(ii)** கைத்தொழில் புரட்சி ஏனைய நாடுகளுக்குப் பரவுவதற்கான காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** கைத்தொழில் புரட்சி, சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை **இரண்டு** விடயங்களை முன்வைத்து விபரிக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** "கைத்தொழில் புரட்சி முற்றுப் பெறாத செயற்பாடு" தொடர்புசாதனங்கள், போக்குவரத்து என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

**09.** **(i)** முதலாம் உலக யுத்தத்தின் முடிவில் சமாதான உடன்படிக்கை செய்வதற்கான பேச்சுவார்த்தையில் பங்கேற்ற பிரதிநிதிகளில் **மூன்று** தலைவர்களின் நாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)


**(ii)** சர்வதேச சங்கம் அமைக்கப்பட்டதற்கான நோக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

**(iii)** சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமைக்கான **இரண்டு** காரணங்களை விபரிக்குக. (05 புள்ளிகள்)

**(iv)** இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் தோற்றம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபை உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு எடுத்த **இரண்டு** நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

***

**1.** (அ) (i)



**1.** (அ) (ii)

